# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

**2021ம் ஆண்டு ஜுன் மாதம் 30ம் தேதி பிற்பகல் 03.00 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டம்.**

பொருள்.1

செங்கல்பட்டு நகராட்சியில் கீழ்கண்ட பணி மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தந்தபுள்ளி அறிக்கை ந.க.எண்.1052/2021/இ1, நாள்.18.05.2021–ன் படி 04.06.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திரு) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிகுட்பட்ட ஒசூரம்மன் கோயில் தெரு முகப்பு மற்றும் காஞ்சிபுரம் நெடுஞ்சாலை சந்திக்கும் இடத்தில் பழுதுபட்ட சிறு பாலத்தை அகற்றி புதிய சிறு பாலம் அமைக்கும் பணி | ரூ.2.90 | கே.வெங்கடேசலு | 0.03% குறைவு |
| | | | இ.சந்திரன் | 2.20% அதிகம் |

மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1259, நாள்30.06.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–2

செங்கல்பட்டு நகராட்சிக்குச் சொந்தமான சமுதாயக் கூடத்தின் பின்புறம் உள்ள கழிவறை பழுதடைந்து பயன்படுத்த முடியாமல் உள்ளது. மேலும் இக்கழிவறை சமுதாயக் கூட்டத்தில் பிரதான முகப்பு கேட்டின் நேர் எதிரே உள்ளதால் சுப நிகழ்ச்சிகளின் போது பொது மக்களுக்கு சங்கமாக இருப்பதாக கருதுவதால் இதை அகற்றிவிட்டு சுற்று சுவரின் ஒட்டினாற்ப்போல் புதியதாக கழிவறை கட்டலாம்.

அ.கு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1260, நாள்30.06.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–3

செங்கல்பட்டு நகராட்சி முதல் நிலை நகராட்சியாகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி வீடுகளின் எண்ணிக்கை 16818, மக்கள் தொகை 67272 கொண்டது. இந்நகராட்சி மாவட்ட தலைநகரத்தில் அமைந்துள்ளது. தற்போது வளர்ந்து வரும் நகராட்சிகளில் செங்கல்பட்டு நகராட்சியும் ஒன்றாகும். இந்நகராட்சியில் 6.09 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 33 வார்டுகளை உள்ளடக்கிய நகராட்சி ஆகும். மேலும், மொத்தம் 43.934 கி.மீ நீளமுள்ள சாலைகள் மற்றும் 32.80 கி.மீ நீளமுள்ள மழைநீர் வடிகால்கள் இந்நகராட்சியால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்நகராட்சியில் மாவட்ட ஆட்சியரகம், நீதிமன்றம், 12 எண்ணிக்கையில் உயர்நிலை பள்ளிகள், தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள், கல்லூரிகள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், போக்குவரத்து பணிமனை, இரண்டு இரண்டாம் நிலை பேருந்து நிலையம், ஒரு முதல் நிலை தினசரி சந்தை, மாவட்ட தலைநகர மருத்துவமனை மற்றும் மருத்துவ கல்லூரி, அனைத்து துறை சார்ந்த அரசு அலுவலகங்களும் உள்ளடக்கிய மாவட்ட தலைநகர நகராட்சி ஆகும். இந்நகராட்சி பகுதிக்கு அன்றாடம் வந்து செல்லும் (Floating Population) மக்கள் தொகை நாளொன்றுக்கு சுமார் 30000 நபர்கள் ஆகும்.

இந்நகராட்சியில் 263 துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில் தற்போது 93 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். தற்போது வாகனம் மற்றும் பேட்டரி வாகனங்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள உள்ளதாலும், வாகனம் இயக்குதல், உரக்குடில்கள் பராமரித்தல், மழைநீர் மற்றும் கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்தல் பணிக்கு 86 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 7 ஓட்டுநர்கள் தேவைபடுகிறார்கள் இப்பணியாளர்களை மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விலைவிகிதத்தின் அடிப்படையில் வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளவும், அதற்காக செலவினம் ரூ.158.59 இலட்சத்திற்கு திருத்திய செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 28 அவர்களின் நிர்வாக அனுமதி பெற பிரேரணையினை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 607/2021/எச்1)

**தீர்மான எண்.1261, நாள்30.06.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–4

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் Door to Door Collection செய்ய பயன்படுத்தப்படும் 13 எண்ணிக்கைகையிலான Battery Operater Vehicle (BOV) –ல் உள்ள மின்கலப்பெட்டிகள் (Battery) பழுதுபட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாக பொது சுகாதாரம் பிரிவில் தெரிவித்தன் பேரில் புதியதாக மின்கலப்பெட்டி (Lithiyan Battery) 3 எண்ணிக்கை வாங்கி பயன்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.60 இலட்சத்திற்க்கு மன்ற அனுமதிக்கும் ஒப்புதலுக்கு.

அ.கு–

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1262, நாள்30.06.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–5

செங்கல்பட்டு நகராட்சி அனைத்து வார்டுகளிலும் சேகரமாகும் மக்கும் குப்பைகளை கொண்டு நகராட்சி உரகிடங்கில் உரமாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப் பணியில் குப்பைகள் மீது தெளிப்பதற்காக இ.எம். சொலுஷன் எனப்படும் திரவம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனை திடநிலையில் உருவாக்குவதற்கு தவிடு, உமி, மற்றும் ஈ மருந்து , தயிர், வெல்லம் போன்றவை தேவைப்படுகிறது. இதனை வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ. 5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்.1263, நாள்30.06.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்–6

செங்கல்பட்டு நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் தலைகவசம் , கையுறை, முக கவசம், காலுறை, வழங்கவும், மற்றும் பயன்படும் பொருட்கள் கத்தி, கடபாறை, மண்வெட்டி, கரண்டி, ஒடு சவல், கூரை, ஊக்கு போன்ற அனைத்தையும் வாங்குவதற்கான தோராய செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு –

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.1264, நாள்30.06.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள்.7

செங்கல்பட்டு நகராட்சி 2020–21 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920–ல் பிரிவு 15–ன் கீழ் கண்ட குடிநீர் நிதியிலிருந்து கீழ்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டது. மேற்கண்ட குடிநீர் நிதியில் போதிய நிதி ஒதிக்கீடு இல்லாததால் ஏப்ரல் மாத வரப்பெற்ற 2021–22 15–வது மத்திய நிதி குழு மானியத்தில் குடிநீர் பணிகள் செய்திட அறிவுறுத்தியுள்ளதன் அடிப்படையில் பொது மக்களின் அவசரம் அவசியம் தேவைக்கான தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920–ன் பிரிவு 15–ல் மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்ட குடிநீர் பணிக்கான பட்டியல் தொகையினை 15–வது மத்திய நிதி குழு மானியத்தில் நிதியிலிருந்து

வழங்கிட தொகையினை 15–வது மத்திய நிதி குழு மானியத்தின் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவா) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பழவேலி தலைமை நீரேற்றும் நிலையத்தில் ஆற்றின் உறிஞ்சு கிணற்றில் பகுதியில் புதிய HDPE, Pipe hose & 50 sqmm cable அமைத்து மின்மோட்டார் இயக்கும் பணி | ரூ.18.05 | M/S Appollo Enterprises | 0.03% குறைவு |
| | செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான மாமண்டூர் நீரேற்றும் நிலையற்றில் ஆற்றில் உறிஞ்சு கிணறு மற்றும் போர்வெல் பகுதிக்கப் புதிய Pipe hose & 50 sqmm cable மற்றும் 5HP (2No) நீர்முழ்கி மோட்டார் அமைத்து இயக்கும் பணி | ரூ.15.05 | K.ராஜகோபால் | 0.02% குறைவு |

ந.க.எண்.0414/2021/E2

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணி தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 கீழ் பணி முடிக்கப்பட்டு பட்டியல் தொகையினை 15–வது தேதிய நிதிகுழு மானியத்தின் நிதியிலிருந்து வழங்கியதனை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1265, நாள்30.06.2021**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (ம) ஆணையர்
செங்கல்பட்டு நகராட்சி